**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**<u>Case No. C.C. No.273/2021</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: P.W-1, L.W- 2 | |
| Name | : Balasubramanian(Forester) | Defence | : |
| Father Name | : Mari | Court | : |
| Village | : Sirkali Forest Range | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.03.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேதாரண்யம் வனச்சரகத்தில் வனவராக உள்ளேன். வழக்கு சமயத்தில் சீர்காழி வனசரகத்தில் வனவராக இருந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 30/09/2016 அன்று காலை சுமார் 10 மணியளவில் நானும் வழக்கு சமயத்தில் வனக்காப்பாளராக இருந்த சாட்சி செல்வமும் அலுவலகத்தில் இருந்தோம். அப்போது அங்கு அலுவலத்திற்கு வழக்கின் சாட்சியாக உள்ள பன்னிர்ச்செல்வம், வனக்காவலர் நடேசனும் , ஆஜர் எதிரியை அலுவலகத்திற்கு அவரது இருச்சக்கர வாகனத்தில் அழைத்து வந்தார்கள். அவரிடம் சாக்குப்பையில் புள்ளி மூக்கு வாத்து இரண்டு வைத்திருந்ததை கண்டோம். அதனை எதிரி அவரது சித்தப்பா பாபு த-பெ. ஜெயபால் என்பவரிடமிருந்து வாங்கி வந்ததாகவும், அதனை விவேகானந்தா பள்ளி உரிமையாளர் வீட்டில் ஒப்படைக்குமாறும் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி வனக்காப்பாளர் பன்னீர்ச்செல்வத்திடம் அளித்தார். அதை என் முன்னிலையில் வனக்காப்பாளர் பதிவு செய்தார். அதன்பெயரில் ஆஜர் எதிரியை அலுவலகத்தில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு ஆஜர் செய்தேன்.. ஆஜர் எதிரியிடமிருந்து புள்ளி மூக்கு வாத்துகள் 2 இரண்டில் ஒன்று உயிருடனும், மற்றொன்றை இறந்த நிலையில் இருந்ததையும் எதிரி வந்த இருச்சக்கர வாகனமான TVS Phonix Bike Red colour TN 82 6716 என்ற வாகனத்தையும் கைப்பற்று மகசரில் கைப்பற்றினேன்.

எதிரிக்கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ,1** ஆகும். கைப்பற்று மகசர் **அ.த.சா.ஆ 2** ஆகும். பின்பு வனச்சரக அலுவலகத்தில் தகவல் தெரிவித்து எதிரியையும், கைப்பற்று மகசரில் கைப்பற்றபட்ட பிடிப்பொருள்களை நீதிமன்றத்தில் படிவம் 91 மூலம் ஆஜர் செய்தோம். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ 3** ஆகும். பின்பு நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்பேரில் உயிருடன் உள்ள பறவை பறக்க விடப்பட்டது. இறந்த பறவை பிரேத பரிசோதனை செய்ய அனுப்பப்பட்டது. பின்பு வனச்சரக அலுவலகரிடம் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று ஒப்படைத்தேன். பின்னர் எதிரியின் மீது இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 49 ன் கீழ் ,பிடிப்பொருள்கள் பற்றிய விபர அறிக்கையான H நமூனாவுடன் , குற்ற அறிக்கையை சீர்காழி வனச்சரக அலுவலரிடம் சமர்ப்பித்தேன். நான் வழங்கிய குற்ற அறிக்கை **அ.த.சா.ஆ 4** மற்றும் H நமூனா **அ.த.சா.ஆ. 5** ஆகும்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியின் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . குறுக்கு விசாரணை இல்லை.